# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| MCOP No. 304/2024 | நாள் – 01.04.2026 | சாட்சி – ம.சா.1 |
| --- | --- | --- |

**திரு. அற்புதமேரி, க/பெ.செங்கோல் தாஸ்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 17.06.2024 அன்று கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 21.06.2024 அன்று விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். அவ்வாறு விடுவிக்கப்பட்டதற்கான விடுவிப்பு சான்று ம.சா.ஆ.2 என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சை பெற்றதற்கு ம.சா.ஆ.2 தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனக்கு வயது என்ன என்றால் 65. எனக்கு வயது 70 என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு 2 நாட்கள் கழித்து நான் கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரிதான். அரசு மருத்துமனையிலும் அன்பு மருத்துவமனையிலும் எனக்கு அறுவை சிகிக்சை செய்யவில்லை என்றால் சரிதான். நான் 21.06.2024 அன்று கும்பகோணம் அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது முழுவதுமாக குணமடைந்து நான் விடுவிக்கப்பட்டேன் என்றாலும் அப்போது எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ வழிமுறைகளை நான் தொடர்ந்து பின்பற்றாததால் மறுபடியும் அன்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற நேரிட்டது என்றால் சரியல்ல. அன்பு மருத்துவமனையில் நான் மேற்கொண்ட சிகிச்சை விபத்து சம்பந்தமாக இல்லை என்றாலும் நான் அஜாக்கிரதையாக இருந்ததால் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சிகிச்சை மேற்கொண்டேன் என்றால் சரியல்ல. கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு ம.சா.ஆ.11 என்றால் சரிதான்.

விபத்து பதிவேட்டில் சிராய்பு காயங்கள் மட்டுமே ஏற்பட்டது என்றும் வேறு காயங்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. ம.சா.ஆ.14 குற்ற இறுதி அறிக்கையிலும் சொற்ப காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு எனது வேலை வருமானத்தை காட்ட கூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு தனியார் மருத்துவமனையில் 1 லட்சம் செலவு செய்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் இருந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் விபத்து சம்பந்தபட்ட காயங்களுக்கு உரியதல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டிய 1ம் எதிர் மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று அதற்காக அபராதம் செலுத்தியதாக ம.சா.ஆ.10 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் ஆய்வறிக்கை ம.சா.ஆ.13 ஆக எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்திலும் ஓட்டுநருக்கு உரிமம் இல்லை என்பதற்காக ரூ.5000/- அபராதம் செலுத்தியதாக காலம் 21ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புதிய மோட்டார் வாகன சட்டத்தின் படி ஓட்டுநர் உரிமம் இல்லாத நபர் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தி இருக்கும் பட்சத்தில் காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றாலும் வாகனத்தின் உரிமையாளர் நேரடியாக இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சை இன்று வரை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் பத்தி 4ல் குறிப்பிட்டவாறு எனக்கு ஊனமோ உபாதைகளோ இல்லை என்றால் சரியல்ல. எனக்கு மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வேலையோ வருமானமோ இல்லை என்றாலும் வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை

என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.8 வரை உள்ள ஆவணங்கள் அனைத்தும் விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் இல்லை என்றாலும் இவ்வழக்கிற்காக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பின் யோசனை இட்டு மேற்கண்ட மருத்துவமனையில் சேர்ந்து மேற்படி ஆவணங்களை இவ்வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற சான்று ஆவணம் 1ல் கொடுக்கப்பட்டுள்ள இயலாமை சதவீதம் மிகைப்படுத்தியும் உரிய ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் செல்வாக்கின் பேரில் பெற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தபட்ட மாதிரி வரைப்படத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் சாலையில் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டது தெரிந்து விடும் என்பதால் மாதிரி வரைப்படத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.04.01 16:19:53 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*